சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு **3** மற்றும் **4** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் இந்த வழக்கை என்ன பரிகாரம் கூறி தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகப்பிரிவினை பரிகாரம் கூறி தாக்கல் செய்துள்ளேன். நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் யாருக்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஐந்தாம் வாதி பாபு, குமார் ஆகியோருக்காக தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தானது என் தாத்தா வீரராகவலுவுக்கு சொந்தமானது என்றால் சரிதான். மேற்படி சொத்தானது என் தாத்தாவிற்கு பாகப்பிரிவினை பத்திரம் மூலம் கிடைக்கப் பெற்றது என்றால் சரிதான். என் தகப்பனாருடைய உடன் பிறந்தவர்கள் சேகர் மற்றும் புருஷோத்தமன் ஆவர். என் தாத்தா இறந்த பிறகு என் தகப்பனார் சிட்டி பாபுவுக்கு வழக்கு சொத்து கிடைக்கப்பெற்றது என்பது என் வழக்கு ஆகும். என் தாத்தாவிற்கு பாகப்பிரிவினை மூலம் கிடைக்கப்பெற்ற சொத்தை பொருத்து நான் எந்த கேள்வியும் எழுப்பவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தானது வீரராகவலுவுக்கு தனிப்பட்ட வாதியப்பட்ட சொத்து என்றால் சரிதான். வீரராகவலுவுக்கு கிடைத்த சொத்தைப் பொறுத்து என் தகப்பனாரோ மற்றவர்களோ இதுவரை கேள்வி எழுப்பவில்லை என்றால் சரிதான் அவர் தான் பயிர் வைத்து அனுபவித்து வந்தார். என் தாத்தாவிற்கு பிறகு வழக்கு சொத்தானது என் தகப்பனார் சிட்டிபாபுவிற்கு முழுமையாக கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். 23.11.1984 அன்று என் தகப்பனார் துரைக்கண்ணுவிற்கு வழக்கு சொத்தை விற்ற விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 2008 ஆம் ஆண்டில் வில்லங்கம் போட்டு பார்த்த போது தெரியவந்தது. எந்த மாதத்தில் தெரிய வந்தது என்றால் ஏப்ரல் மாதத்தில் தெரிய வந்தது. 2008 ஆம் ஆண்டில் எனக்கு என்ன வயது என்று கேட்டால் 21 வயது ஆகும். நான் இந்த வழக்கை 2011 ஆம் ஆண்டில் தாக்கல்

செய்தேன். என் தகப்பனாரின் எல்லா வாரிசுகளும் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. என் தாயாரை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர் இறந்துவிட்டார். வழக்கு தாக்கல் செய்த காலத்தில் என் தாயார் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். என் தகப்பனார் 23.12.2016ல் காலமானார் என்றால் சரிதான். 2008 ஆம் ஆண்டில் எனக்கு விவரம் தெரிந்த நிலையில் 2011 ஆம் ஆண்டில் நான் ஏன் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் எங்கள் கிராமத்தில் உள்ளவர்கள் எங்களது நிலத்தை யாரோ பார்வையிடுகிறார்கள் என்று சொன்னார்கள் அதன் பிறகு தான் தெரியவந்தது. கடைசியாக நான் சொத்தை எப்போது பார்த்தேன் என்றால் நான் பார்க்கவில்லை என் அண்ணன் பார்த்தார். யாரோ சொத்தை அபகரிக்கிறார்கள் என்று நான் கூறும் நிலையில் காவல் நிலையத்தில் அது பற்றி புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. 13.06.1990 அன்று ஒன்றாம் பிரதிவாதி தனது மக்களான குமார், சேகர் ஆகியோரோடு சேர்ந்து சொத்தை விற்று உள்ளார் என்றால் சரிதான். எனது வழக்குரையில் என் சகோதரர் சேகரை பற்றி எந்த விபரமும் சொல்லவில்லை என்றால் மேற்படி சேகர் எனது அப்பாவின் தம்பி ஆவார். மேற்படி சேகர் என் அப்பாவின் தம்பி என்ற விபரத்தை வழக்குரையில் சொல்லவில்லை.

(நேரமின்மையால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)